MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

# ஆற்றுப்படை இலக்கியங்கள் சுட்டும் விறலியர்

முனைவர் **வீ.முத்துலட்சுமி,**
உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி(தன்னாட்சி ),சிவகாசி
8940033551 - muthulakshmi-tam@sfrcollege.edu.in
DOI 10.5281/zenodo.12751137.

**Abstract :**

**The people of the Sangam era had a dual life with nature. They worked for the sake of virtue. Those who were tired of work needed joy and rest. At that time, dancing and singing with music gave them peace. Those who performed such dancing and singing were called artists. They spread the mythological ideas to the people with their body movements and showed their artistic skills. Among them were women artists.**

**Key Words : Sangam Era - Attruppatai - Mythological**

**முன்னுரை:**

இயற்கையோடு இரண்டறக் கலந்த வாழ்க்கை சங்ககால மக்களுடையது.அவர்கள் அறத்தின் பொருட்டாகத் தொழில் செய்தனர்.தொழில் செய்து களைப்படைந்தவனுக்கு மனமகிழ்வும் ஓய்வும் தேவைப்பட்டது.அந்நேரத்தில் இசையுடன் கூடிய ஆடலும் பாடலும் அவர்களுக்கு நிம்மதியைத்தந்தது.அப்படிப்பட்ட ஆடலையும் பாடலையும் நிகழ்த்துபவர்கள் கலைஞர்கள் எனப்பட்டனர்.தம் உடல் அசைவுகளால் புராண இதிகாசக் கருத்துக்களை மக்களிடம் பரப்பி தன் கலைத்திறனை வெளிப்படுத்தினர்.அதற்குக் கைமாறாக பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர்.இவர்களில் பெண் கலைஞர்களும் இடம்பெற்றிருந்தனர்.

**இலக்கியங்கள் சுட்டும் கலைஞர்கள்:**

இலக்கியம் என்பது சமூகத்தின் விளைச்சல் ஆகும். இலக்கியம் அந்தந்தக் காலச் சமூகத்தையும் அதன் பண்பாட்டையும் உள்ளீடாகக் கொண்டுள்ளது. சங்க இலக்கியத்தின் வழிஇ பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு மரபினை நுட்பமாக ஆராயும் போதுஇ அவ்விலக்கியத்தின் சிறப்பையும் பயனையும் மேலும் சிறப்பாக உணர முடியும். அந்த வகையில் பாணர் சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையான இடங்களில்


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

சுட்டிக்காட்டப்பட்டுள்ளனர். அகத்துறையானாலும் புறத்துறையானாலும் பாணரின் செயல்பாடு இன்றி எதுவும் இல்லை என்ற நிலையை அவர்கள் உருவாக்கியிருந்தனர். பாணர் சமூகத்தைச் சார்ந்த மகளிரும் இத்துறையில் சிறந்து இயங்கியுள்ளனர்.

ஆடல் பாடல்களை உடல் அசைவுகளில் வெளிப்படுத்த வல்ல கலைஞர்களை தொல்காப்பியர்

**“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்”** என நிரல்படுத்துகிறது.

புறநானூறு

**“துடியன் பாணன் பறையன் கடம்பன்**
**இந்நான்கல்லது குடியும் இல்லை”** என்கிறது.

ஆக, கூத்துக்களை நிகழ்த்தும் கலைஞர்கள் சமூகத்தில் தனக்கென ஒரு தனி அங்கிகாரத்துடன் சங்ககாலத்திற்கு முன்பே இனக்குழு சமூகமாக வாழ்ந்துள்ளனர்; என்பது வெளிச்சமாகிறது.

**விறலி**

ஆடல், பாடல், கூத்து இவற்றில் சிறந்து விளங்கும் மகளிர்கள் விறலியர் பாடினியர் என்று சுட்டப்பட்டனர். இவர்கள் பாணர், பொருநர் என்பவர்களோடு சென்று மன்னர்களையும், வள்ளல்களையும் சந்தித்துத் தங்களின் ஆடல் பாடல்களால் அவர்களை மகிழ்வித்து அதற்குப் பாிசாக ‘பொற்பூ’ பெற்றவர்களாவர்கள். பாணரையும், பொருநரையும் மணம் செய்து கொண்டு இவர்கள் வாழ்ந்திருக்க வேண்டும். சமூகத் தொடர்புடைய இப்பெண்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்திருக்க வேண்டும் என்பது இரா. பிரேமா அவர்களின் கருத்தாகும்.

‘சில்வளை விறலியும், யானும்’**1**
‘தேஎம் தீம் தொடைச் சீறியாழ்ப் பாண!
--------------------------------
இன் நகை விறலியொடு மென்மெல இயலிச்
செல்வை ஆயின் செல்வை ஆகுவை’**2**
‘கூந்தல் விறலியர்’**3**
‘கொடி மருங்கில் விறலியருமே’ **4**


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

'சில் வளை விறலி!
மலர்ந்த வேங்கையின் வயங்கு இழை அணிந்து,
மெல் இயல் மகளிர் எழில் நலம் சிறப்ப,
பாணர் பைம் பூ மலைய'5

என்னும் சான்றுகள் அதை உணர்த்தி நிற்கின்றன. இதைப் போலவே விறலியரைப் பற்றிய பதிவுகளைக் காணும்பொழுது பெரும்பாலான பாணர் குழுக்களில் விறலியர் இடம்பெற்றிருக்கின்றனர் என்பதைக் காணமுடிகிறது.

எண் வகை மெய்ப்பாடுகளையும் புலப்படுத்தும் விறல் (மெய்ப்பாட்டுத் திறமை) மிக்கவளே விறலி எனப்பட்டாள். விறலியாற்றுப்படை என்று ஒரு தனித்துறையே உள்ளது. ஆடலும், பாடலும் தொழிலாகக் கொண்ட மங்கையர் விறலியர் எனப்பட்டனர்.

**அபிதான சிந்தாமணி**, "எண்வகைச் சுவையும் மனத்தின் கண் பட்ட குறிப்புகளும், புறத்துப் போந்து புலப்பட ஆடுதல் விறலாதலின் அதனை யாடுபவள் இவள் விறலி எனப்பட்டாள்"; என்கின்றது.

"வெற்றி மன்னன் கீர்த்தியைச் சொல்லும் பாணிச்சியை வழிப்படுத்துவது விறலியாற்றுப்படை" என்றும் அபிதானசிந்தாமணி விளக்குகிறது.

**விறலியின் வேறுபெயர்கள்:**

பாணர்களில் ஆடவரைச் "சென்னியர்இ வயிரியர், செயிரியர், மதங்கர், இன்னிசைகாரர், பாணரென்ப" எனப் பிங்கல நிகண்டும், பாணர்களின் பெண்டிரைப் "பாடினி, விறலி, பாட்டி,மதங்கி, பாடல் மகடூஉ பாண்மகள்" எனத் திவாகரமும் குறிப்பிடுகின்றன.

**ஆற்றுப்படை இலக்கியம்:**

ஆறு +படை =ஆற்றுப்படை, ஆறு - வழி, படை - படுத்துவது,ஆற்றுப்படை - வழிப்படுத்துவது. இதனைத் தொல்காப்பியர் புறத்திணையியலில் அரசர்களையும் வள்ளல்களையும் புகழ்ந்து பாடும் முறைகூறும்பாடாண்பகுதியில்

"கூத்தரும்பாணரும்பொருநரும்விறலியும்
ஆற்றிடைக்காட்சிஉறழத்தோன்றிப்
பெற்றபெருவளம்பெறாஅர்க்கறிவுறீஇச்
சென்றுபயன்எதிரச்சொன்னபக்கமும்"

என்று குறிப்பிட்டுள்ளார்.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

உணவில்லாது வருந்தும் பறவையினங்கள் பழுத்தமரம் எங்குள்ளது எனத் தேடி அலைந்து தன் உணவை உண்ணும். அது போல வறுமையில் வாடிய பாணன் தன் சுற்றத்தோடு ஓரிடத்தில் தங்காது, தன்னை ஆதரிப்பவரை நாடி இரவும் பகலும் அலைந்தான். மெலிந்த உடலினை உடையவனாகக் காணப்பட்டான் என்பதை,

**"பழுமரம் தேரும் பறவை போல,**
**கல்லென் சுற்றமொடு கால் கிளர்ந்து திரிதரும்**
**புல்லென் யாக்கைப் புலவு வாய்ப் பாண!"**

என்ற பெரும்பாணாற்றுப்படை பாடல் வரிகளானது, பாணன் பிழைப்பிற்காக தன் சுற்றத்தோடு பல்வேறு இடங்களுக்குச் சென்று நாடோடியான வாழ்க்கை மேற்கொண்டான் என்பதைத் தெளிவாக்குகிறது.

விறலி பாணனின் மனைவி கூத்துக்கலையில் வல்லவளாகத் திகழ்ந்துள்ளாள். ஆற்றுப்படை இலக்கியத்தில் விறலியின் வாழ்க்கை முறையானது எவ்வாறு அமைந்திருந்தது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1.**கேசாதிபாத வருணனைக்குரியவள்**
2.**இசையறிவு படைத்தவள்**
3.**பரிசில் பெற்று வாழும் வாழ்க்கைக்குரியவள்**
4.**இடம் பெயர் குடிவாழ்க்கையவள்**
5. **தகைவால் கற்பினள்**
6. **ஆற்றுப்படுத்தும் அருவுள்ளம் கொண்டோர்**

வருணனை

மறத்திலும் அறத்தைப் பின்பற்றி வாழ்ந்த தமிழர்கள் வருணிப்பதிலும் சிலநெறிமுறைகளைப் பின்பற்றினர். இறைவனை பாதாதிகேசமாகவும் மானுடர்களை கேசாதிபாதமாகவும் வருணிக்கும் முறைமையைப் பின்பற்றினர்

**கேசாதிபாதம்**

கேசம்+ஆதி+பாதம்
கேசம்-முடி(தலை)
ஆதி-முதல்
பாதம்-அடி


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

அதில் ஒவ்வோர் உறுப்பாக எடுத்துக் கொண்டு உவமை கூறி வருணிப்பர். முடி முதல் அடி வரை அதாவதுதலைமுதல்கால்வரைவருணிப்பதுகேசாதிபாதம்ஆகும்.

**பாதாதிகேசம்**

கேசாதிபாத வருணனைக்கு நேர் மாறானது பாதாதிகேசம். பாதம் +ஆதி+கேசம் =பாதாதிகேசம். அதாவது அடி முதல் முடி வரை வருணித்தல். பிற்காலத்தில் பாதாதிகேச வருணனை முறை தெய்வங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று இலக்கணம் வகுத்தனர்.

**கேசாதிபாத வருணனைக்குரியவள்:**

பொருநர் ஆற்றுப்படையிலும் சிறுபாணாற்றுப்படையிலும் விறலியின் கேசாதிபாத வருணனை இடம்பெறுகின்றன.

**"அறல்போல் கூந்தல், பிறை போல் திருநுதல்,**
**கொலைவில் புருவத்து, கொழுங்கடை மழைக்கண்,**
**இலவு இதழ் புரையும் இன்மொழித் துவர் வாய்,**
**பலஉறுமுத்தின் பழிதீர் வெண்பல்,**
**------------------------------**
**------------------------------**
**நன்பகல் அந்தி நடைஇடை விலங்கலின்,**
**பெடைமயில் உருவின், பெருந்தகு பாடினி"**

இவளின் தோற்றப்பொலிவினை ஆற்றுப்படை நூல்களுள் பொருநராற்றுப்படை சிறப்பாக வருணிக்கின்றது.சிறுபாணாற்றுப்படையோஇவர்களின் மென்மை மிக்க இயல்பையும் அழகையும் சிறுபாணாற்றுப்படை (13 -33 ) அடிகளில் அழகாக கேசாதிபாதமாக தலை முதல் கால் வரை நத்தத்தனார் வருணித்துள்ளார்.

**விறலியரின்கூந்தல்**

உலகிற்கு அருள் செய்ய வல்ல மெல்லியதாய் வீழ்கின்ற மழையைப் போன்ற அழகு உடைய கருமையானகூந்தல்.

**சாயல்(மென்மை)**

மழைமேகத்தைக் கண்டு தோகை மயில்கள் தம் தோகையை விரித்து ஆடுவது இயற்கை. விறலியரின் கூந்தலை மழை மேகம் என்று மயில்கள் நினைத்தன. அதனால் மகிழ்ச்சியாகத் தம் தோகையை விரித்து ஆடின. ஆகாலும்


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

அவற்றிற்கு வெட்கம் வந்து விட்டது. ஏன் தெரியுமா? தமது தோகையின் சாயல் விறலியரின் கூந்தல் சாயலுக்குச் சமமாகாது என்று மயில்கள் கருதியதால் ஆகும்.

**நுதல்**

நுதல் என்றால் நெற்றி. இது ஒளி மிக்கதாக உள்ளது.பெண்களின் நெற்றி ஒளி வீசக்கூடியது என்று கூறுவதுவழக்கம்.

**கண்**

நீலமணிபோன்றகண்கள்

**பார்வை**

மருட்சிஎடையஇளமையானமானின்பார்வைபோன்றுஉள்ளது.

**எயிறு**

எயிறு என்றால் பல். நுங்கின் இனியநீர் போன்று சுவையை உடையதாக எயிற்று நீர் அமைந்துள்ளது.

**மார்பகம்**

கோங்கு என்ற மலரின் அரும்பைப் போன்று அணிகலன்களுக்கு இடையே அடங்கிக் கிடக்கும் மார்பகம்.

**தொடை**

கரிய பெண் யானையின் தும்பிக்கையைப் போன்ற செறிந்த தொடை.

**ஓதி(மயிர்முடிப்பு)**

வாழைப்பூவின்தோற்றம்போன்றஅழகியஓதி.

**அடி**

ஓடி இளைத்த வருந்துகின்ற நாயின் நாக்கைப் போன்ற பாதம். சிலம்பு முதலிய அணிகலன் ஏதும் இன்றிஅழகற்றுஇருக்கிறது.

**சுணங்கு**

வண்டுகள் மொய்த்து ஆரவாரம் செய்கின்ற வேங்கை மலர் போன்ற சுணங்கு.

இயற்கையை வருணித்துப் பாடும் வழக்கம் இருந்த காலகட்டத்தில் விறலியின் வருணனைகள் இடம்பெறுவது அவள் சமூகத்தில் பெற்றிருந்த உயரிய மதிப்பையே காட்டுகின்றது.

**பாடும் திறன் அறிந்தவள்:**


http://Creativecommons.org//license/by/4.0/.

ஆடலில்லா இசை இருக்கலாம். ஆனால் இசையில்லாத ஆடலே இல்லை எனலாம். சொல்லப்போனால் ஆடலுக்கு உயிர் இசை என்றாகிறது.இசையின் தரம் குன்றினால் ஆடல் தன் சிறப்பை முழுமையாக இழந்து விடுகிறது. எனவே இனிய குரலின் பாட்டிசையும் இனிய கருவிகளின் இசையும் ஆடலோடு இனிது பொருந்தும் விதத்தில் பாடும் திறன் அறிந்தவளாகவும் பாடினி விளங்குவதை பொருநர் ஆற்றுப்படையானது ,

"பாடினி பாணிக்கு ஏற்ப நாள்தொறும்"6 எனப்பதிவு செய்துள்ளது.

பொருநர் இசைத்த இசையானது ஆறலைக்கள்வர்களையும் மதிமயங்கச் செய்தமையை ,

"ஆறலைக் கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை" எனச்சான்று பகர்கின்றன.

**மலைபடுகடாமானது விறலியின் இசையறிவினை,**

"அமைவரப் பண்ணி அருள்நெறி திரியாது
இசைபெறு திருவின் வேந்தவை ஏற்ப"7எனக்காட்டுகிறது. நூற்களில் சொல்லிய முறையின் வழுவாது பேரியாழை இசைக்கும் வலிமையுடையவளாகக் காட்டப்படுகிறாள்.

**பரிசில் பெற்று வாழும் வாழ்க்கை உடையவள்:**

ஆடல் பாடலில் வல்லவளான விறலி தன் பிழைப்பிற்காக கலைத்திறனை வெளிப்படுத்தியமையை ஆற்றுப்படை இலக்கியங்கள் வெட்டவெளிச்சமாக்குகின்றன.தம்பாணர் குழுக்களுடன் சேர்ந்து தம்மை ஆதரிக்கும் வள்ளல்களை நாடிச்சென்று ஆடிப்பாடி அவர்களை மகிழ்வித்து புரவலர்கள் கொடுக்கும் பரிசில்களைப் பெற்று வாழ்க்கை நடத்தும் நிலையை **சிறுபாணாற்றுப்படையானது,**

"ஊர்ந்து பெயர்பெற்ற எழில்நடைப் பாகரொடு
மாசெலவு ஒழிக்கும் மதனுடைநோன்தாள்
வாள்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ
அன்றே விடுக்கும் அவன் பரிசில்"8என நல்லியக்கோடன் வழங்கிய பரிசில்களை நிரல்படுத்துகிறது. **மலைபடுகடாமானது**


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

"சீர்கெழு சிறப்பின் விளங்கு இழைஅணிய
நீர் இயக்கன்ன நிரைசெலல் நெடுந்தேர்
வாரிக் கொள்ள வரைமருள் வேழம்"9நன்னன் செய் நன்னனிடம் விறலிபெற்ற பரிசில்களை நிரல்படுத்துகிறது. இச்சான்றுகளைப் பார்க்கும் போது கலைஞர்கள் இரந்துண்ணம் வாழ்க்கை முறையை உடையவர்கள் என்பது வெளிப்படுகிறது.

**இடம் பெயர் வாழ்க்கையள்**:

ஓர் இடத்தில் நிலையாகத் தங்கியிராது எங்கெங்கெல்லாம் தம்மை ஆதரிக்கும் வள்ளல்கள் உள்ளனரோ அங்கெங்கெல்லாம் அவர்களை நாடிச்சென்று தம் கலைத் திறனை வெளிப்படுத்தி பரிசில் பெற்றனர். பின்னர் தமக்கு பரிசில் கொடுத்த வள்ளல்களிடம் விடைபெற்று சென்றமையை,

**"செல்வேம்தில்ல எம்தொலபதிப் பெயர்ந்தென**
**மெல்லெனக் கூறி விடுப்பின் நும்முள்"10**

என நன்னனிடம் விடைபெற்று சென்றமையையும் பொருநர் ஆற்றுப்படையில் பொருநரை பிரியா விடை கொடுத்து அனுப்பியமையை,

**"அகறிரோ எம் ஆயம்விட்டு?என**
**சிரறியவள் போல் செயிர்த்த நோக்கமொடு"11**

எனும் வரிகளானது கரிகாலனிடம் பரிசில் பெற்றுத் திரும்பும் பொருநர் குடியினரைச் சுட்டுக் காட்டுகிறது.

**வள்ளல்களை நாடி வறுமையை நீக்கிக் கொள்தல்**:

பாணர் , பொருநர் குடியினர் மிகவும் வறுமையில் வாடியதை ஆற்றுப்படை இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.பொருநராற்றுப்படையில் உடுத்துவதற்கு நல்ல தூய்மையான ஆடையற்றவனாக பொருநன் திகழ்வதை,

"ஈரும் பேனும் இருந்து இறைகூடி,
**வேரோடு நனைந்து வேற்று இழை நுழைந்த**
**துன்னற்சிதாஅர்துவரநீக்கி"12**

எனவும் சிறுபாணாற்றுப்படையில் பாணன் வீட்டு அடுக்களையில் நாய்க்குட்டிபோட்டிருந்ததாகவும் காளான்கள் பூத்திருந்ததாகவும் சமைக்க வழியில்லாததால் குப்பைக் கீரையை உப்பின்றி உண்டனர் எனவும் இதனைப்


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

பிறர் பார்த்தால் தமக்கு அவமானம் எனக் கருதி தலைவாசல் கதவினை அடைத்தனர் என்வும் செய்திகள் இடம்பெறுவதை,

**"திறவாக் கண்ண சாய்செவிக் குருளை**
**கறவாப் பால்முலை கவர்தல் நோனாது**
**புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்**
**காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த**
**………………………………………**
**குப்பை வேளை உப்பிலி வெந்ததை**
**மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து**"13

என்ற வரிகளானது பாணர் குழுவினர் வறுமையிலும் செம்மையுடையவர்களாகவும் பிறர் இழி சொல்லுக்கு ஆளாகக் கூடாது என்ற தன்மானம் மிக்கவர்களாகவும் காட்டப்படுகின்றனர்.

**தகைசால் கற்பினள்**:

இத்தகு அழகும் அறிவும் வாய்ந்த விறலியரின் மென்னையான இயல்பையும் கற்பின் சிறப்பையும்; புலவர்கள் குறிப்பிடத் தவறவில்லை. விறலியர் முல்லை சான்ற கற்பும் மெல்லியல்பும்மான்நோக்கும்வாள்நுதலும்உடையவள்என்பதைஇ

"முல்லைசான்றகற்பின்மெல்லியள்
மடமான் நோக்கின் வாள்நுதல் விறலியர்" (30-31) என்னும் அடிகள் சுட்டுகின்றன.

**ஆற்றுப்படுத்தும் அருவுள்ளம் கொண்டோர்**:

தாம் பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம் என்பதற்கு இணங்க தம் வறுமையை நீக்கிய புரவலர்களிடம் தம்மைப் போன்றோரை வழிப்படுத்தியமையையும் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.தீடீரென மழை பெய்தால் வறண்ட பூமி எவ்வாறு வளமுடன் காணப்படுமோ அதுபோல நீங்களும் உங்கள் வறுமை நிலையை நீக்க விரும்பினால் தொண்டைமான் இளந்திரையனிடம் செல்லுங்கள் என பரிசில் பெற்ற பாணன் ஆற்றுப்படுத்துவதை,

**"பெருவறம் கூர்ந்த கானம் கல்லெனக்**
**கருவி வானம் துளிசொரிந் தாங்குப்**
**பழம் பசி கூர்ந்த எம் இரும்பேர் ஒக்கலொடு**
**வழங்கத் தவாஅப் பெருவளன் எய்தி**"(பெரும்.23-26)


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

என்ற பாடலடிகளானது சித்திரித்துக் காட்டுகின்றது.

**பிற்காலத்தில் விறலியரின் நிலை:**

விறலியர் சங்ககாலத்தி பெற்றிருந்த மதிப்பும் மரியாதையும் சங்கம் மருவிய காலத்தில் அவளுக்குக் கிடைக்கவில்லை.

சங்கம் மருவிய காலப் படைப்புகளே காப்பியங்கள். தமிழ்க் காப்பியங்களில் கலையைத் தொழிலாகக் கொண்டவர்கள் கதை மாந்தர்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர். நடன மகளிர் அனைவரும் பொது மகளிராகவும்இ விலைமகளிராகவும்இ பரத்தமை தொழிலில் ஈடுபடுபவராகவும் தமிழ்க் காப்பியங்களில் காட்டப்பட்டுள்ளனர்.

**"சலம்புணர்க்கொள்கையோடுசலதியொடுஆடி**
**குலந்தருவான்பொருட்குன்றம்தொலைந்த**
**இலம்பாடுநாணுந்தரும்"**

மனைத்தக்க மாண்பு இல்லாத இனம் எங்களுடையது. கற்பென்னும் திண்மையை உடைத்து நொறுக்கிய சமுதாயம்இ எங்களைப் பெருந்தகவாக எப்படி ஏற்றுக்கொள்ளும்? எனக் கேள்விக் கணையைத் தொடுக்கிறது.

வயது முதிர்ந்த கணிகை,இளைய கணிகைக்கு உன்னிடம் வருபவர் பலர் இருப்பினும்இ பொருள் மிகுதியாகக் தருபவரை ஏற்றுக்கொள் என அறிவுரை கூறுவதோடு கணிகையரை விலங்குகளோடுஒப்பிட்டுக்கூறியுள்ளார்.

கணிகையர் பொருளைக் கவரும் இயல்பினர் என்பதை உணர்த்துகின்றன. ஆணாதிக்க வேட்கைக்குப் பெண்கள் பழியானதோடு,சமூகத்தில் அவமானச் சின்னமாக வாழ வேண்டிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. திருமணத்துக்குப் புறம்பான ஒழுக்கத்தில் ஆண்களும் பெண்களும் ஈடுபட்டாலும் பெண்ணை மட்டுமே இச்சமூகம் இழிவாகவும் கேவலமாகவும் கருதுகிறது. தவறு செய்யும் ஆணைக் கண்டிக்கவோ, இடித்துரைக்கவோ செய்யவில்லை.

நடன மகளிர் அடிமைகளாக ஒரு நாட்டிலிருந்து மற்ற நாட்டிற்கு அனுப்பப்பட்டதை உணர முடிகிறது.

கணிகை மகளிரை நுகர்ந்து வாழும் வாழக்கை மாண்புடையதன்று. கணிகையர் குலத்தில் பிறந்தால்இ அவள் சாகும் வரை கணிகையாகவே இருக்க வேண்டும் என்று சமூகம் கட்டாயப்படுத்துகிறது. கணிகையாகிய பெண் சமுதாயத்தில் விலங்கு போன்று கருதப்பட்டுள்ளாள். பொருட்களை ஏலம்


http://Creativecommons.org//license/by/4.0/.

விடுவது போன்றுஇ பெண்களை ஏலம் விடும் ஒரு அபத்த நிலையே அன்றைய சமூகத்தில் நிலவியுள்ளது. ஆண்களின் காம விளையாட்டுக்கான கால்பந்தாகப் பெண்கள் பயன்படுத்தப்பட்டுள்ள இழிவு நிலையினைக் காப்பியங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**தொகுப்புரை:**

சோழர்களது ஆட்சிக்காலத்தில் பகைநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டு இறைப்பணிக்கென நியமிக்கப்பட்டவர் தேவதாசிப்பெண்கள். நாயக்கர் ஆட்சிக்காலம் இதற்குப்பேரழிவினைத்தேடித்தந்துள்ளது.

கோவிலுக்கு ஆடு, மாடுகளை நேர்ந்து விடுவது போன்று "பொட்டுக் கட்டுதல்" என்னும் சடங்கின் வாயிலாக தேவதாசிப் பெண்களை நேர்ந்து விடுகின்றனர். உணர்விழைகளால் உயிரூட்டப்பட்ட பாவையை அஃறிணை உயிராக்கியுள்ளனர். இச்செயல் ஆணாதிக்கத்தின் உச்சகட்டத்தைச்சுட்டிக்காட்டுகிறது.

கற்பென்னும் சிறைக்குள் பெண்மையைச் செலுத்தி வாழ்நாள் முழுவதும் தன்னை நிரபராதியாகியுள்ளனர்ஆண்மக்கள்.

தொல்காப்பியர் காலந்தொட்டு மரபுகளை உடைத்தெறிந்த புதுக்கவிதை வரையிலும் பாலியல் உணர்வால் நெறி தவறிய ஆணினம் மேன்மைபடுத்தப்பெற்று அதற்குப் பழியான பெண்ணினம் "பரத்தை" என இழிவுபடுத்தப் பெற்றுள்ளதை இலக்கியப் பதிவுகளின் வழி அறிந்துகொள்ளமுடிகிறது.

பெண்மையைச் சிறப்பிக்கப் பல சட்டங்கள் இயற்றப்பட்டாலும் நடைமுறை வாழ்வில் அவை யாவும் நலம் சேர்க்கவில்லை என்பதை விறலி விடு தூதிலக்கியப் பதிவுகள் காட்டுகின்றன.

**அடிக்குறிப்புகள் :**

1. **புறநானூறு** , 60;5.
2. **புறநானூறு** 70:1-16
3. **பதிற்றுப்பத்து**.18;6
4. **புறநானூறு**. 139;4
5. **பதிற்றுப்பத்து**.40:21-24
6. **பொருநறாற்றுப்படை**,49


http://Creativecommons.org//license/by/4.0/.

7. மலைபடுகடாம்.38-39
8. சிறுபாணாற்றுப்படை.258-265
9. மலைபடுகடாம் 569-572
10. மலைபடுகடாம்..567-568
11. பொருநறாற்றுப்படை.123-125
12. பொருநறாற்றுப்படை.79-81
13. சிறுபாணாற்றுப்படை .130-138


http://Creativecommons.org//license/by/4.0/.